

சென்னை, காமராசர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (28.7.2025) நடைபெற்ற கவிஞர் ஜீவபாரதி எழுதியுள்ள "காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்" என்ற நூல் வெளியீட்டு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியை, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வாசித்தார். இந்நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் டி.ராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்களெல்லாம், பொதுவுடைமைச் சிந்தனையின் செயல்வடிவங்களே!

# கவிஞர் ஜீவபாரதியின் 'காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்' நூல்; பொதுச் சமூகத்திற்கு வழிகாட்டும் மிகப் பெரிய ஆவணம்!

## நூல் வெளியீட்டு விழாவிற்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜுலை 30 -**

**சென்னை, காமராசர் அரங்கில் நடைபெற்ற கவிஞர் ஜீவபாரதி எழுதி யுள்ள "காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்" நூல் வெளியீட்டு விழாவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியினை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வாசித்தார்.**

**அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்களெல்லாம் பொதுவுடைமைச் சிந்தனையின் செயல்வடிவங்களே! அவரது வழியில்தான் நமது திராவிட மாடல் அரசும் தவறாமல் பயணித்து வருகிறது" என்றும் – "கவிஞர் ஜீவபாரதி எழுதியுள்ள, 'காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்" நூல் பொதுவுடைமை இயக்கத்திற்கு மட்டுமின்றி, பொதுச் சமூகத்திற்கும் வழிகாட்டக்கூடிய மிகப்பெரிய ஆவணமாக இருக்கும்!" என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கவிஞர் ஜீவபாரதி எழுதியுள்ள "காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்" என்ற நூலின் வெளியீட்டு விழாவில் பங்கேற்க வேண்டும் என்று தோழர் முத்தரசன் தேதி கேட்டபோது, "தங்களுக்கு இல்லாத தேதியா?" என்று கூறி உடனடியாக நிகழ்ச்சிக்கு வர ஒப்புதல் அளித்தேன். ஆனால், மருத்துவர்கள் அறிவுறுத்தலின்படி சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்க இயலவில்லை என்பது வருத்தமளிக்கிறது.

### கருத்தியல் விழுமியம்!

பொதுவுடைமைக் கருத்தியல் என்பது மானுடத்திற்கான மறுக்க முடியாத கருத்தியல் விழுமியம் என்பதோடு, நமது மண்ணுக்கும் மக்களுக்கும் அதன் தேவை மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. அதை உணர்ந்ததால்தான் முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்திலும், அரசியல் அணுகு முறைகளிலும் அதன் சுவடுகள் அழுத்தமாகவே பதிந்திருந்தன. அந்த உணர்வோடுதான் "தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்திக்காமல் போயிருந்தால் நானும் ஒரு கம்யூனிஸ்டாகத்தான் இருந்திருப்பேன்" என்று அவர் அடிக்கடி கூறினார்.

அது வெறும் அலங்காரக் கூற்றல்ல என்பதற்கான சான்றுதான் 1956ஆம் ஆண்டு நங்கவரத்தில் அவர் நடத்திய போராட்டமும், அதற்கு மக்கள் மத்தியில் கிடைத்த அமோக ஆதரவும்!

அதே உணர்வோடுதான், பின்னாளில் முதலமைச்சராகப் பதவியேற்ற போது, உழுபவருக்கே நிலம் சொந்தம், நில உச்சவரம்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினார். பொதுவுடைமைக் கருத்தை வெறும் அரசியலாக மட்டுமின்றி, மக்களின் வாழ்க்கையினையே மேம்படுத்துவதற்கான கருவியாக, சட்டத்தின் கூறுகளாக மாற்றிச் செயல்படுத்துவதுதான் அவரது ஆட்சிமுறையாகவே இருந்தது. குடிசை மாற்று வாரியம், கை ரிக்சா ஒழிப்பு உள்ளிட்ட முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் கொண்டு வரப்பட்ட திட்டங்களெல்லாம் பொதுவுடைமைச் சிந்தனையின் செயல்வடிவங்களே!

அவரது வழியில்தான் நமது திராவிட மாடல் அரசும் தவறாமல் பயணித்து வருகிறது. இடதுசாரி இயக்கங்கள் மீதும், தலைவர்கள் மீதும் நான் கொண்டிருக்கும் பேரன்பும், பெரும் பாசமும் நாடறிந்த ஒன்று. பல விழாக்களில் முதுபெரும் தோழர் மணலி கந்தசாமி அவர்களின் கருத்துகளை மேற்கோள் காட்டி நான் பேசுவதை நீங்கள் அறிவீர்கள். பொதுவுடைமைத் தத்துவத்தை உலகுக்குத் தந்த மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் சிலை சென்னையில் நிறுவப்படும் என்று அறிவித்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சமத்துவம், சமதர்மத்தின் கம்பீர அடையாளமாக கார்ல் மார்க்ஸின் சிலை சென்னையில் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற எனது ஆவலின் வெளிப்பாடே அது!

அதுமட்டுமின்றி, நமது திராவிட மாடல் அரசு ஏழை, எளிய மக்களின் நலன்களுக்காகப் புதிய புதிய திட்டங்களை நாள்தோறும் செயல்படுத்தி வருவதையும் கண்கூடாகப் பார்த்து வருகிறீர்கள். விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடங்கி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் உள்பட சமூகத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில், "எல்லார்க்கும் எல்லாம்" என்ற பொதுவுடைமைக் கருத்தியலை நடைமுறை வாழ்வியலாக மாற்றுவதற்கான அத்தனை முயற்சிகளையும் திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது என்பதில் எனக்கு பெருமிதம் உண்டு!

### அதிகார விடுதலை!

இந்தியச் சமூக அமைப்பைப் பொறுத்தவரை அதிகார விடுதலை மட்டும் போதாது, வர்க்க விடுதலையும், சமூகவிடுதலையும் இணைந்ததாக இருந்தால்தான் அது முழுமையானதாக இருக்கும் என்ற அன்றைய பொதுவுடைமைத் தலைவர்களின் கருத்தும், சமூகநீதி இயக்கமாக வழிவந்த திராவிட இயக்க முன்னோடிகளின் சிந்தனையும் எத்தனை தீர்க்கமானது என்பதை இன்றுவரை அனுபவரீதியாக உணர்ந்து வருகிறோம்.

அதனால்தான், பொதுவுடைமை இயக்கமும்; திராவிட இயக்கமும் இந்த இருபெரும் விடுதலைக்காக இரட்டைக் குழல் துப்பாக்கிளாக இன்றுவரை இயங்கி வருவதையும் நாம் அறிவோம்.

இத்தகைய ஆழமான வரலாற்று உண்மையை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னெடுப்புடன் கவிஞர் ஜீவபாரதி வடித்துள்ள இந்நூல், இந்த மண்ணின் சிந்தனையைச் சிவப்பாக்கிய 'தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் தோழர் சிங்காரவேலர்' முதல் 'மேடைத் தமிழுக்கு மேன்மை சேர்த்த தா.பாண்டியன்' வரையிலான நூறு கம்யூனிஸ்ட் தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை இரு பாகங்களாக இன்றைய தலைமுறைக்கு எடுத்து இயம்புகிறது.

### கம்யூனிஸ்ட் தோழர்களின் தியாக வாழ்வு!

தோழர்கள் சங்கரய்யா, நல்லகண்ணு போன்று இன்றைய தலைமுறையினர் பார்த்து வியந்த தலைவர்கள் முதல், தோழர்கள் பி.சீனிவாச ராவ், பி.ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம், பாலதண்டாயுதம், மணலி கந்தசாமி போன்ற பிரபலமான முந்தைய தலைவர்களின் வரலாறும், கம்யூனிஸ்ட் தோழர்கள் மட்டுமே அறிந்த இயக்கத்தின் வேரில் ரத்தம் சொரிந்து செவ்வியக்கம் வளர்த்த செம்மல்கள் பலரின் தியாகவாழ்வின் சிறப்பும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நூல் பொதுவுடைமை இயக்கத்திற்கு மட்டுமின்றி, பொதுச் சமூகத்திற்கும் வழிகாட்டக் கூடிய மிகப்பெரிய ஆவணமாக இருக்கும் என்பதில் அய்யமில்லை. இந்தத் தருணத்தில், இந்த நூலில் இடம்பெற்றுள்ள பொதுவுடைமை இயக்கம் குறித்த கருத்துகளையும், கம்யூனிஸ்ட் தலைவர்களின் தியாகமிகு வாழ்வு குறித்த தகவல்களையும் இன்றைய தலைமுறையினரும் அறிந்திடும் வகையில், சமூக ஊடகங்கள் மூலம் பரப்பிட ஆவன செய்ய வேண்டும் என்று கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நூலை உருவாக்க வழிவகுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் முத்தரசன் அவர்களுக்கும், கடுமையாக உழைத்து தகவல்களைப் பதிவு செய்திருக்கும் கவிஞர் ஜீவபாரதி அவர்களுக்கும், அவருக்கு உதவிய மற்ற தோழர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'காலம்தோறும் கம்யூனிஸ்டுகள்' நூலின் வெளியீட்டு விழா சிறக்கவும், அனைவரின் சிந்தனைக்கு விருந்தாகச் சென்று சேரவும் எனது உளமார்ந்த வாழ்த்துகள்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### விமானப் பாதுகாப்பு குறித்து

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் – கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 30-

நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு "விமானங்களின் பராமரிப்பு - பாதுகாப்பு குறித்து ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?" என்று கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் முரளிதர் மொஹல் அளித்த பதில் வருமாறு:

அகமதாபாத்தில் போயிங் 787 ரக விமானம் விபத்துக்குள்ளான அடுத்த நாளே, நாட்டில் மொத்தமுள்ள 33 போயிங் 787 ரக விமானங்களிலும் பாதுகாப்பு அம்சங்களை ஆய்வுசெய்ய உத்தரவிடப்பட்டு, இதுவரை 31 விமானங்களில் ஆய்வு முடிந்துள்ளது. 8 விமானங்களில் சிறிய அளவிலான கோளாறுகள் கண்டறிந்து சரி செய்யப்பட்டபின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டது.

இவ்வாறு ஒன்றிய



அமைச்சர் முரளிதர் மொஹல் பதிலளித்தார்.

---



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (28.07.2025) ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களை தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் நேரில் சந்தித்து தமிழ்நாட்டிற்கு 2024–2025 ஆம் ஆண்டுக்கான நிலுவையிலுள்ள சமக்ரா சிக்ஷா நிதியையும், 2025–2026 ஆம் ஆண்டுக்கான முதல் தவணை நிதியையும் உடனடியாக வழங்கிட வலியுறுத்தினார்கள். இந்நிகழ்வின்போது பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### புலிகளைப் பாதுகாப்பதன் வழியே

# காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம்!

## உலகப் புலிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜுலை 30-**

**புலிகளைப் பாதுகாப்பதன் வழியே நம் காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உலகப் புலிகள் நாளையொட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

உலகப்புலிகள்நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உலகப் புலிகள் நாளில் தமிழ்நாடு பெருமிதத்துடன் முழங்குகிறது!

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத் தரவுகளின்படி, 306 புலிகளைக் கொண்டுள்ளது தமிழ்நாடு. இந்த வெற்றிக்குக் காரணம், கடினமான பகுதிகளில், முக்கியத்துவம் மிகுந்த புலிகளின் வாழிடங்களைப் பாதுகாக்கும் நமது வனத்துறைப் பணியாளர்களும், வேட்டைத் தடுப்பு அணியினரும்தான்.

வனங்களைப் பாதுகாக்கும் பணியினை மேம்படுத்திட,

1,947 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன, வனத்துறையினருக்கு நவீன உடைகள், தொழில்நுட்பக் கருவிகள் வழங்கப்படுகின்றன, கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அயல் ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றி, புலிகளின் வாழிடங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. காடுகளின் வளம் மேம்படுத்தப்படுகிறது. கானுயிர் மீதான குற்றங்கள் புரியும் கும்பல்களை அடக்க, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு (TNWFCCB) எனும் சிறப்புப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

புலிகளைப் பாதுகாப்பதன் வழியே, நம் காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### கேரளத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் சத்தீஷ்கரில் துன்புறுத்தப்பட்டு கைது!

# சிறுபான்மை மக்கள் மாண்போடும் - சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும்!

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜுலை 30-

கேரளத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் இருவர் சத்தீஷ்கர் மாநிலத்தில் பஜ்ரங்தள் அமைப்பின் பொய்க்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் துன்புறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கும் தகவலறிந்து சமூக வலைதளத்தில் விடுத்த கண்டனப் பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்தியாவின் சிறுபான்மையின மக்கள் மாண்போடும் சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கேரளத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் இருவர் சத்தீஸ்கர் மாநிலத்தில் பஜ்ரங் தள் அமைப்பின் பொய்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் துன்புறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது.**

**இத்தகைய கும்பல் வன்முறையும், அரசு அது குறித்து அமைதி காப்பதும் மதப் பயங்கரவாதத்தின் ஆபத்தான போக்கை வெளிப்படுத்துகிறது.**

**இந்தியாவின் சிறுபான்மையின மக்கள் மாண்போடும் சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும்; மாறாக அவர்களை அச்சுறுத்தக் கூடாது.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### பணிபுரியும் பெண்கள் — மாணவிகளின்

# பாதுகாப்பை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

## மாநிலங்களவையில் — இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 29-

பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவிகளின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன் ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பினார். மாணவர்களுக்கான வசதிகள் பெண்களில் பணிபுரியும் இடங்களிலும், மாணவிகள் கற்கும் இடங்களிலும் சுகாதார வசதிகள், பாதுகாப்பான கழிப்பறைகள், சுத்தமான தண்ணீர் போன்றவை இல்லாதது அவர்களின் ஆரோக்கியம், சுயமரியாதை, கண்ணியம், பாதுகாப்பு ஆகியவற்றை மோசமாகப் பாதிக்கிறது என்பதையும், பெண்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதையும் கடினமாக்குகிறது என்பதையும் ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா என்றும், இதுபோன்ற இன்னல்களை குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் இணை அமைச்சர் சாவித்ரி தாக்கூர், பெண்களின் உடல் நலம், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசு எடுத்த முயற்சி



யால், ஸ்வச் பாரத் அபியானின் கீழ் 11.8 கோடிக்கும் மேற்பட்ட வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன என்றும், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் மூலம் 15.6 கோடி வீடுகளுக்கு குழாய் நீர் இணைப்புகளை வழங்கப்பட்டுள்ளது என்றும், இதன் மூலம் பெண்களின் சோர்வு மற்றும் நேரமின்மை ஆகியவற்றை குறைத்து சுகாதாரத்தை மேம்படுத்த உதவியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**மலிவு விலையில் சானிட்டரி**

நாப்கின்கள் மற்றும் தரமான மருந்துகளை எளிதாகப் பெறுவதை உறுதி செய்வதற்காக, பிரதம மந்திரி ஜனசதி பரியோஜ்னா (PMBJP) திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனசதி மையங்கள் அமைக்கப்பட்டு, அவை மூலம் நியாயமான் விலையில் மருந்துகள் வழங்கப்படுவதுடன், சுவிதா என்ற மக்கக்கூடிய சானிட்டரி நாப்கின்களை ஒரு பாக்கெட் ஒரு ரூபாய் என்ற விலையில் வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை இளம் பருவப் பெண்களிடையே அதிகரிக்கும் நோக்கில், 10 முதல் 19 வயதுக்குட்பட்ட இளம் பருவப் பெண்களிடையே, அங்கீகாரம் பெற்ற சமூக சுகாதார ஆர்வலர் (ASHA) மூலம் மானிய விலையில் சானிட்டரி நாப்கின் பொதிகள் வழங்கப்பட்டுவருவதாகவும் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் தெரிவித்துள்ளார். கிராமப்புறங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த தேசிய வழிகாட்டுதல்களையும் ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளதாக பதிலளிக்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவிகளுக்காக மிஷன் சக்தியின் கீழ், வேலை செய்யும் பெண்கள் விடுதிக்கான சகி நிவாஸ் திட்டத்தை செயல்படுத்தி வருவதாகவும், இந்தத் திட்டத்தை செயல்படுத்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி விடுவிக்கப்படுவதாகவும் பதில் கூறப்பட்டுள்ளது. சகி நிவாஸில் வசிப்பவர்களின் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையம் வழங்குவதும் இந்த திட்டத்தின் முக்கிய அம்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சி என்ற கருத்தை உணர்வதற்கான முக்கிய படியாக, பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம், வாய்ப்பை உறுதிசெய்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையால், மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி (SASCI) திட்டத்தின் கீழ் பணிபுரியும் பெண்களுக்கான புதிய விடுதிகளைக் கட்டுவதற்காக 28 மாநிலங்களுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும், அதன்மூலம் 52,991 படுக்கைகள் கொண்ட 254 பணிபுரியும் பெண்கள் விடுதிகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவற்றிற்கு 4 ஆயிரத்து 826 கோடியே 31 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், முதல் தவணையாக 3,147 கோடியே 66 லட்ச ரூபாய் 202425ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் தரப்பில், தி.மு.க. எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.